RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 58 | மார்ச்.6 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ‘திமுக ஆட்சி மேலும் 5 ஆண்டுகாலம் அமைந்திட பாடுபடுவோம்’ : முதல்வர் ஸ்டாலின்



சென்னை: மார்ச்.6-

“2021 தேர்தலில், திமுக 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆளும் வாய்ப்பைத் தாருங்கள். அதிமுக ஆட்சியில் 50 ஆண்டுகால அளவுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டுள்ள தமிழ்நாட்டை மீட்டு உயர்த்திக் காட்டுவோம் என்று வேண்டினேன்.

நான் அப்போது கேட்டது போல, மேலும் 5 ஆண்டுகால ஆட்சியை திமுக அமைத்திட வேண்டும். திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திட பாடுபட வேண்டும்.” என முதல்வர் ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு: திருச்சி சிறுகனூரில் மார்ச் 9 ஆம் தேதி கழக மாநாடு நடைபெறவிருக்கிறது. 75 ஆண்டுகளைக் கடந்த இந்தப் பெருங்குடும்பத்தின் ஒட்டுமொத்த நிர்வாகிகளும் ஓரிடத்தில் ஒன்றுகூடி, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைப்போம் என உறுதியேற்று, களம் காணும் பட்டாளமாக அணிவகுக்கும்போது, எதிரிகள் நடுங்குவது இயல்புதானே.

தலைவர் கலைஞர் போல எனக்குப் பேசவோ, எழுதவோ வராது. அவரிடம் நான் கற்றுக்கொண்டது உழைப்பு. அந்த உழைப்பு இந்த இயக்கத்தைக் கட்டிக்காப்பதற்கான உழைப்பு. இந்திய அரசியல் வரலாற்றில், கூட்டணிக் கட்சிகளை கொள்கைத் தோழமைகளாக அரவணைத்து, லட்சிய நோக்கத்துடன் பயணிக்கினற வாய்ப்பு, உங்களால் கழகத்தின் தலைவர் பொறுப்பு அளிக்கப்பட்டவனான உங்களில் ஒருவனான எனக்குக் கிடைத்திருக்கிறது.

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்காக உருவான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, 2020 ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், பல இடைத்தேர்தல்கள், எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் எனத் தொடர்வது மட்டுமல்ல, புதிதாக மேலும் பல கட்சிகள் நம் கூட்டணியில் இணைந்து கூடுதல் வலிமையைப் பெற்றிருக்கிறோம்.

அதனால்தான், அரசியல் எதிரிகள் தங்கள் கட்சியின் வலிமை மீது நம்பிக்கை இல்லாமல், நம்முடைய கூட்டணி உடையாதா என்று ஏங்கிக் கிடந்தார்கள். நம்மிடமிருந்து அவர்கள் வெளியேறி விடுவார்கள் என்றும், இவர்கள் பிரிந்து போகப் போகிறார்கள் என்றும் கனவில் கணக்கு போட்டு கற்பனைக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆஃபர் கொடுத்தேனும் நம் கூட்டணியை உடைத்திடலாம் என முயற்சி செய்தார்கள். அவர்களின் கற்பனையையும் கனவுகளையும் ரசித்தபடி நாம் நம்முடைய பணியை மேற்கொண்டோம்.

மதவெறி அரசியலுக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை, மாநில உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்கிற கொள்கை உணர்வுமிக்க நம் தோழமைக் கட்சியினருடன் தொடர்ந்து இணக்கமாகவும் ஜனநாயகத் தன்மையுடனும் ஆலோசனைகள் நடத்தி, நம் பயணத்தில் இணைந்திட விரும்பிய கட்சிகளுக்கும் இடமளித்து, உறுதியான வெற்றிக்கான கூட்டணியை உங்களில் ஒருவனான நான் தலைமையேற்றுத் தொடர்கிறேன்.

திராவிட மாடல் ஆட்சியினால் பயன் பெறாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்கிற வகையில் சாதனைத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம்.

மண்டலவாரியாக இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடுகள், மகளிரணியின் வெல்லும் தமிழ்ப் பெண்கள் மாநாடுகள், ஙிலிகி2, ஙிலிசி, ஙிஞிகி பயிற்சி மாநாடுகள் எனத் தேர்தலை முன்னிட்டு நாம் நடத்திக்காட்டிய ஒவ்வொரு மாநாட்டிலும் லட்சத்துக்கும் மேற்பட்ட உடன்பிறப்புகள் கருப்பு சிவப்பு படையாய்க் திரண்டு வந்து கலந்துகொண்டனர்.

இவற்றைத் தொடர்ந்து, மார்ச் 9ஆம் நாள் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ என்ற பெயரிலான கழக நிர்வாகிகள் சந்திப்பு பிரம்மாண்ட மாநாடு நடைபெறவிருக்கிற திருச்சி சிறுகனூரில்தான், 5 ஆண்டுகளுக்கு முன் 2021ஆம் ஆண்டு தேர்தல் சிறப்பு மாநாடு நடைபெற்றது. அப்போது உடன்பிறப்புகளான உங்களிடமும் பொதுமக்களிடமும் நான் வைத்த கோரிக்கை, ‘திமுகழகத்திற்கு 10 ஆண்டுகள் தொடர்ச்சியான ஆள்கின்ற வாய்ப்பைத் தாருங்கள். அதிமுக ஆட்சியில் 50 ஆண்டுகால அளவுக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லப்பட்டுள்ள தமிழ்நாட்டை மீட்டு உயர்த்திக் காட்டுவோம்’ என்பதுதான்.

தொடர் பயணத்திற்கும், தடையில்லா வளர்ச்சிக்கும், ஒவ்வொரு துறையிலும் உலகத் தரத்திலான முன்னேற்றத்திற்கும், நான் அப்போது கேட்டது போல, மேலும் 5 ஆண்டுகால ஆட்சியை நாம் அமைத்திட வேண்டும். திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திட வேண்டும். தீரர் கோட்டமாம் திருச்சியில் கூடுவோம். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட உறுதியேற்றுக் களம் காண்போம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## “நாங்குநேரியில் ரத்த ஈரம் காய்வதற்குள் மற்றொரு சம்பவம்!” அரசு மீது இபிஎஸ் சாடல்



சென்னை: மார்ச்.6-

இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவரின் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி யுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சிவகங்கை மாவட்டம் இடைக்காட்டூர் கிராமத்திற்குள், இருசக்கர வாகனங்களில் அரிவாள் மட்டும் பட்டாக் கத்திகளுடன் வந்த ஒன்பது மர்மநபர்கள், கண்ணால் கண்டவர் மீது கொடூரத் தாக்குதல் நடத்தியுள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

இதே மாதிரியான தாக்குதல் 2 நாட்களுக்கு முன்பு தான் நாங்குநேரி அருகே உள்ள பெரும்பத்து கிராமத்தில் நடந்துள்ளது. அதன் ரத்த ஈரம் காய்வதற்குள் அதேபோன்றதொரு தாக்குதல் மீண்டும் நடக்கிறது என்றால், இவை சொல்லவரும் செய்தி என்ன?

சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய முதலமைச்சர், ஒரு கையாலாகாத வெறும் பொம்மை முதல்வராக இருக்கிறார் என்பது தானே?

திமுக அரசின் "குற்றவாளிகள் கைது" நடவடிக்கையைக் கண்டு குற்றவாளிகள் யாரும் பயந்த மாதிரியே தெரியவில்லை. பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் புகுந்து தைரியமாக இப்படி ஒரு கொலைவெறித் தாக்குதல் நடக்கிறது என்றால், இங்கே நடக்கும் சமூக அநீதி திமுக அரசு இதையெல்லாம் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது என்று தானே மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

இப்படி மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய முதல்வர் என்ன செய்துக் கொண்டிருக்கிறார் தெரியுமா? "முடிந்துவிட்டது" என தான் காட்டிய சைகை வைரல் ஆனதாக வெட்டிப் பெருமை பேசிக் கொண்டிருக்கிறார்.

உங்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முடிந்துவிட்டது. பெண்கள் பாதுகாப்பு முடிந்துவிட்டது. சமூக நீதி முடிந்துவிட்டது. மொத்தத்தில், தமிழக மக்களின் நிம்மதியே முடிந்துவிட்டது.

இப்படி முடிந்துவிட்டதை எல்லாம் திரும்பப் பெற ஒரே வழி, உங்களுடைய விடியா ஆட்சிக்கு முடிவு கட்டுவதே. அதை மிக விரைவில் தமிழக மக்கள் சிறப்பாக செய்ய காத்திருக்கிறார்கள்.

இடைக்காட்டூர் கிராமத்தில் அரங்கேறிய கொலைவெறித் தாக்குதலில் தொடர்புள்ள அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.



■ மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, துணை தலைவர் திரு.கான் முகமது, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## ஈரான் விவகாரம் : “சுயாட்சி உரிமையில் பிரதமர் மோடி சமரசம்” ராகுல் காந்தி



புதுடெல்லி: மார்ச்.6-

‘‘நாட்டை வழி நடத்த ஒரு உறுதியான தலைமை நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால், இந்தியாவின் தன்னாட்சியை ஒப்படைத்துவிட்ட சமரசம் செய்து கொண்ட பிரதமர்தான் நமக்கு உள்ளார்’’ என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இலங்கை அருகே இந்தியப் பெருங்கடல் பகுதியில் ‘ஐஆர்ஐஎஸ் டேனா’ என்ற ஈரான் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கி கப்பல் நடத்திய தாக்குதலில் அதில் இருந்த 87 வீரர்கள் உயிரிழந்தனர். இந்தக் கப்பல் இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் கடந்த மாதம் நடந்த மிலன் 2026 கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றது. பயிற்சி முடிந்து ஈரானுக்கு திரும்பிக் கொண்டிருந்த நிலையில், இந்த போர்க்கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி உள்ளது.

இந்த தாக்குதலுக்கு ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அராக்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், ‘‘ஈரான் கடற்கரையிலிருந்து சுமார் 2,000 மைல் தொலைவில் கடலில் அமெரிக்கா ஒரு கொடூரச் செயலை நிகழ்த்தியுள்ளது. இந்திய கடற்படையின் விருந்தினராக இருந்த டேனா (Dena) என்ற போர்க்கப்பல், சர்வதேச கடல் பகுதியில் எச்சரிக்கையின்றி தாக்கப்பட்டது. அதில் சுமார் 130 கடற்படையினர் இருந்தனர்.

என் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள்: அமெரிக்கா உருவாக்கிய இந்த முன்னுதாரணத்துக்காக அந்த நாடு கடுமையாக வருந்த வேண்டிய நிலை வரும்’’ என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த விவகாரத்தைச் சுட்டிக்காட்டி ராகுல் காந்தி வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ‘‘உலகம் தற்போது அதிர்வுகளால் நிரம்பிய ஒரு கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. கடுமையான சவால்கள் காத்திருக்கின்றன.

இந்தியாவின் எண்ணெய் விநியோகம் ஆபத்தில் உள்ளது. நமது இறக்குமதிகளில் 40%க்கும் மேற்பட்டவை ஹோர்முஸ் நீரிணை வழியாக நடப்பவை. அந்த பாதை தற்போது மூடப்பட்டுள்ள நிலையில், எல்.பி.ஜி மற்றும் எல்.என்.ஜி விநியோகத்தில் நிலைமை இன்னும் மோசமாகக்கூடும்.

இந்த மோதல் நம் வீட்டின் (நாட்டின்) வாசலுக்கே வந்துவிட்டது. இந்தியப் பெருங்கடலில் ஓர் ஈரானிய போர்க்கப்பல் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிரதமர் இதுவரை எதையும் கூறவில்லை.

இப்படிப்பட்ட நேரத்தில், நாட்டை வழிநடத்த ஒரு உறுதியான தலைமை நமக்குத் தேவை. ஆனால் அதற்கு பதிலாக, இந்தியாவின் மூலோபாய தன்னாட்சியை ஒப்படைத்து சமரசம் செய்து கொண்ட பிரதமர்தான் நமக்கு உள்ளார்’’ என தெரிவித்துள்ளார்.

## ‘கரூரின் 4 தொகுதிகளிலும் திமுக அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறும்’ செந்தில் பாலாஜி



கரூர்: மார்ச்.6-

2021ம் ஆண்டு தேர்தலை விட கரூர் மாவட்டத்தின் 4 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெறுவோம் என முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் 73 வது பிறந்த நாளையொட்டி கரூர் மாநகராட்சி 47வது வார்டான கோடங்கிப்பட்டியில் இன்று சில்வர் அண்டா பரிசு வழங்கும் நிகழ்ச்சியை முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்து மக்களுக்கு பரிசு வழங்கினார். கரூர் மாநகராட்சி துணை மேயர் ப.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அப்போது, முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியது: முதல்வர் ஸ்டாலின் 73வது பிறந்த நாளையொட்டி கரூர் மாவட்டத்தில் 4 சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட 3.30 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் 1 வார காலத்திற்குள் இப்பணிகள் நிறைவடையும்.

கடந்த 2021ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நிலையில் கரூர் மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மேலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மக்களை சந்திக்கும் போது அவர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளனர். அவர்கள் முதல்வருக்கு தங்கள் முழு ஆதரவை தெரிவிக்கின்றனர்.

2021ம் ஆண்டு தேர்தலில் கரூர் மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளிலும் உதய சூரியன் சின்னம் வெற்றி பெற்றது. 2026ம் ஆண்டு தேர்தலிலும் 4 தொகுதிகளிலும் கடந்த முறை பெற்ற வாக்குகளை விட மிக அதிக வாக்குகள் பெற்று உதய சூரியன் வெற்றி பெறும்.

காங்கிரஸ் கூட்டணி குறித்து எதிர்க்கட்சி ஆசைகளை தெரிவித்திருந்தன. தோழமை கட்சிகளுக்கு உரிய மரியாதை கொடுத்து அரவணைத்துச் செல்பவர் முதல்வர். அதனை தேர்தல் கூட்டணியாக கருதாமல் தொடர்ந்து தோழமையுடன் தொடர்வார்.

தோழமை கட்சிகளுக்கு உரிய மரியாதை வழங்குவதில் இந்தியாவிலே சிறந்த ஆளுமையாக திகழ்பவர். சில நேரங்களில் தோழமை கட்சிகள் மாற்றுக் கருத்துகள் கொண்டிருந்தாலும் அவர்களை அரவணைத்து செல்வார்.

பாஜக, அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தங்கள் இருப்பைக் காட்டிக்கொள்ள திமுகவை விமர்சித்து வருகின்றன. இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் உள்ள 1,111 வாக்குச் சாவடிகளிலும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ திட்டத்தில் மகளிர் வீடு வீடாக சென்று அரசு திட்டங்களை எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

எதிர்பார்ப்பதற்கு மேலாக 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றிப்பெற்று 2வது முறை ஸ்டாலின் முதல்வராவார் என்றார்.

## 23 கிலோ கஞ்சா பறிமுதல் கடத்தி வந்த ஒருவர் கைது செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு ஆய்வாளர் ஜமீஸ்பாபு அதிரடி நடவடிக்கை!



மாதவரம், மார்ச். 6-

ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லா தமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, செங்குன்றம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வாளர் ஜமீஸ்பாபு தலைமையிலான போலீசார் மொண்டியம்மன் நகர் சோதனை சாவடி அருகே சோதனையில் ஈடுபட்டிருந்த போது சந்தேகப்படும் படியாக வந்த கோயம்பத்தூரை சேர்ந்த ஹரிபிரசாத் (வ/30) த/பெ மாரிமுத்து என்பவரை விசாரணை செய்து அவர் வைத்திருந்த இரண்டு ஷோல்டர் பைகளை சோதனை செய்த போது அதில் 23 கிலோ கிராம் காஞ்சா இருப்பது தெரியவந்து அவற்றை கைப்பற்றி குற்றவாளியை கைது செய்து விசாரணை செய்ததில் கஞ்சாவை ஒடிசா மாநிலத்தில் இருந்து வாங்கி வந்தது தெரியவந்தது. இதனையடுத்து குற்றவாளி மீது வழக்கு பதிவு செய்து பொன்னேரி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

## நீலகிரி மாவட்டம் உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ரூ.70.23 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா திட்ட பணிகளுக்கு அரசு தலைமை கொறடா அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்



நீலகிரிமார்ச். 6-

நீலகிரி மாவட்டம், உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் ரூ.70.23 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) திட்ட பணிகளுக்கு, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அரசு தலைமை கொறடா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில், இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் அறிவிப்பின்படி (SASCI ) மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி திட்டம் 20242025 உதகை ரேஸ்கோர்ஸ் பகுதியில் சுற்றுச்சூழல் பூங்கா (Eco Park) ரூ.70.23 கோடி மதிப்பீட்டில் பணிகளை செயல்படுத்த திட்டமிட்டு முதல் கட்டமாக ரூ.12.33 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளும் வகையில் இன்றைய தினம் அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டப்பணிகள் தொடங்கப்பட்ட பிறகு படிப்படியாக அடுத்த கட்டப்பணிகள் நடைபெற்று விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தில் குளங்கள் அமைக்கப்பட்டு, அதனுள் பூர்வீகத் தாவரங்களுடன் கூடிய சுத்திகரிப்பு திட்டுகளும், மிதிவண்டிப்பாதை, நடைபாதை விழிப்புணர்வு கண்காட்சிக் கூடம், கேளிக்கை அரங்கம் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியன அமைக்கப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சதுப்பு நில பராமரிப்பு மற்றும் பூர்வீகத் தாவர பராமரிப்பு ஆகியவை இத்திட்டத்தில் கருப்பொருளாக முன்னிருத்த செயல்படுத்தப்படும். மேலும், கோடை காலம் மற்றும் விடுமுறை காலங்களில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள் மற்றும் புகைப்பட ஆர்வலர்கள் பெருமளவில் அதிகரித்து உள்ளூர் பொருளாதாரம் மேம்படும்.

இயற்கையுடன் இணைந்து அமைதியான நேரத்தை களிக்க விரும்புவோர் அனைவரும் உதகை சுற்றுச்சூழல் பூங்கா சிறந்த தேர்வாக விளங்கும் என அரசு தலைமைக்கொறடா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மண்டல மேலாளர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் யுவராஜ், உதவி செயற்பொறியாளர் குணசேகரன், உதகை நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, உதகை நகர்மன்ற துணைத்தலைவர் ரவிக்குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் சங்கர், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## சங்கரன்கோவிலில் ரூபாய் 40.50 லட்சம் மதிப்பீட்டில் உழைப்பாளர் நலக்கூடம் காணொளி காட்சி மூலமாக முதல்வர் திறந்து வைத்தார்

### மாவட்ட ஆட்சியர் நாடாளுமன்ற உறுப்பினர் பங்கேற்பு

தென்காசி மார்ச். 06-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில், அம்பேத்கர் நகரில் புதியதாக ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடத்தினை திறந்து வைக்கும் நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து 10 கட்டுமானத் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1,63,600 மதிப்பிலான கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, இயற்கை மரண உதவித்தொகை, ஓய்வூதியத்திற்கான உதவித்தொகை மற்றும் தொழிலாளர் நல அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.இந்நிகழ்வில், சங்கரன்கோவில் நகர்மன்ற தலைவர் கௌசல்யா, தொழிலாளர் நல வாரிய உதவி ஆணையர் (ச.பா.தி) ஜெனிபர் மற்றும் அரசு அலுவலர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## மீன் உற்பத்தி பண்ணையை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் திறந்து வைத்தார்

தேனிமார்ச். 06-

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் வண்ண மீன் உற்பத்தி பண்ணையை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் திறந்து வைத்து, வண்ண மீன்கள் உற்பத்தி செய்யும் பணியினை தொடங்கி வைத்தார்.

தேனி மாவட்டம், வைகை அணைப்பகுதியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் உள்ள அரசு மீன் பண்ணையில் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வண்ண மீன் உற்பத்தி பண்ணையை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் திறந்து வைத்து வண்ண மீன்கள் உற்பத்தி செய்யும் பணியினை தொடங்கி வைத்தார். மத்திய மாநில மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் நிதி உதவியுடன் நடுத்தர அளவிலான வண்ண மீன் பண்ணை அமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.3.20 இலட்சம் மானியத்துடன் ரூ. 8.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பண்ணையில் கோல்டு, ஏஞ்சல், டெட்ரா, பிளாட்டி, கப்பீஸ், மோலி, ஜிப்ரா, டைகர். மற்றும் கொய் போன்ற வண்ண மீன்கள் தொட்டிகளில் இருப்பு செய்து உற்பத்தி செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்.

( மதுரை இந்நிகழ்ச்சியில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் மண்டலம்) ந.வேல்முருகன், உதவி இயக்குநர் (தேனி) .ந.சௌந்தரபாண்டியன் மற்றும் மீன்வள ஆய்வாளர், சார் ஆய்வாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் அலுவலகம் குடியிருப்பு திறப்பு விழா

மாதவரம், மார்ச்.6-

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி மூலமாக பல்வேறு காவல் நிலையங்களை திறந்து வைக்கும் பொழுது, ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட சோழவரம் ஒன்றியம் சிறுணியத்தில் செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் குடியிருப்பை திறந்து வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் சிறுணியத்தில் ரூபாய் 1 கோடியே 11 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் அலுவலகம் மற்றும் குடியிருப்பை ஆவடி காவல் ஆணையரக இணை ஆணையர் சிவக்குமார் தலைமை ஏற்று ரிப்பன்வெட்டி திறந்து வைத்தார்.பின்னர் குத்துவிளக்கு ஏற்றிவைத்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினர். இதில்

செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையர் பாலாஜி, செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் ராஜா ராபர்ட் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, கிளாஸ்டின்டேவிட், பரணி மற்றும் காவலர்கள், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சற்குணம், முன்னாள் கவுன்சிலர் தீபாநாகராஜ் உள்ளிட்ட வழக்கறிஞர்கள், காவல்துறை அதிகாரிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



## கீழக்கோட்டையில்சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக உலக வனவிலங்குகள் தினம்

காளையார் கோவில் மார்ச். 06-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக உலக வனவிலங்குகள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி முன்னிலை வகித்தார். ஆங்கில பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்றார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி இத்தினமானது வனவிலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2013ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டது. அழிந்து வரும் வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகம் குறித்த ஒப்பந்தம் 1973 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட தினத்தில் இந்த நாளை நினைவுபடுத்தக் கூடியதாகவும் ஐக்கிய நாடுகள் சபையால் மெய்நிகர் கொண்டாட்டமாக வனவிலங்கு தினம் கொண்டாடப்படுகிறது. 2026 ஆம் ஆண்டின் கருத்துருவானது மருத்துவ மற்றும் நறுமண தாவரங்கள் சுகாதார பாரம்பரியம் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல் என்பதாகும். நிலையான பயன்பாடு மற்றும் பாதுகாப்பு பற்றிய கதைகள் மற்றும் விளக்கக்காட்சிகள் இடம் பெற வேண்டும் என்றும் விளக்கி கூறினார். வனவிலங்குகள் குறித்து திரைப்படம் காண்பிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த பாடல்கள் பாடி ஊக்குவிக்கப்பட்டனர். கணினி பயிற்றுநர் வித்யா நன்றி கூறினார்.

## நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே பாண்டியார் தேயிலை தோட்ட தொழிற்சாலையில் காசநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் சிறப்பு முகாம்



நீலகிரி மார்ச். 6-

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே பாண்டியார் தேயிலை தோட்ட தொழிற்சாலையில் காசநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் சிறப்பு முகாம் நடைபெற்றது.

காசநோய் ஒழிப்பு திட்டம், கூடலூர் அரசு மருத்துவமனை காசநோய் பிரிவு, கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், ஆல் த சில்ரன் ஆகியன சார்பில் நடைபெற்ற

இந்த முகாமிற்கு பாண்டியார் கோட்ட மேலாளர்

ஜோ பெனோ தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

பாண்டியார் தேயிலை தொழிற்சாலை டீ மேக்கர் சேகர், ஆல் த சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித், காசநோய் பிரிவு மேற்பார்வையாளர் மனோஜ், ஆய்வக மேற்பார்வையாளர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

பந்தலூர் காசநோய் பிரிவு மேற்பார்வையாளர் விஜயகுமார் பேசுகையில் காசநோய் என்பது காற்றில் பரவும் தொற்றுநோய், டிரிபோ குலோசிஸ் எனும் கிருமி நுரையீரலில் சேர்ந்து காசநோய் பாதிப்பு ஏற்படுத்துகிறது. இதனை எஸ்ரே மூலம் சளிகட்டு உள்ளதை கண்டறிந்து சளி மாதிரி எடுத்து நவீன கருவிகள் மூலம் பரிசோதனை செய்து கண்டறியபடும். இதன்மூலம் காசநோய் கண்டறிந்தால் அரசு மூலம் இலவசமாக தொடர் சிகிச்சை அளிக்கப்படும் என்றார்.

கூடலூர் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் காசநோய் முடி மற்றும் நகம் ஆகியன தவிர்த்து அனைத்து பகுதிகளிலும் காசநோய் பாதிப்புகள் ஏற்படும். இது உடலில் ஊட்டசத்து குறைபாடு காரணமாக வேகமாக பரவும், எனவே ஊட்டசத்து உள்ள உணவுகள் எடுத்து கொள்ள வேண்டும். ரேசன் கடைகளில் ஊட்டசத்து குறைபாடு போக்க ஊட்டசத்து சேர்க்கப்பட்ட செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது இதனை முறையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் ஆரோக்கியமான உணவுகள், கீரைகள் பழங்கள் போன்றவை உணவில் எடுத்து கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து 50க்கும் மேற்பட்டோருக்கு காசநோய் கண்டறியும் எக்ஸ்ரே எடுத்து பரிசோதனை செய்யப்பட்டது 20 பேருக்கு சளி மாதிரி சேகரிப்பு எடுக்கப்பட்டது.



## மாதவரம் தெற்கு பகுதி 30வது வார்டில் திமுக பொதுக்கூட்டம் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்

மாதவரம், மார்ச்.6- சென்னை பொன்னியம்மன்மேடு தணிகாசலம் நகர் எப்பிளாக் போலீஸ் பூத் அருகே மாதவரம் தெற்கு பகுதி 30வது வார்டு திமுக சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 30வது வட்டகழக செயலாளரும், 30வது வார்டு மாமன்ற உறுப்பினருமான திருமலை ஜி.துரைசாமி ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் தலைமையில் நடைபெற்றது.மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் துக்காராம் முன்னிலை வகித்தார். முன்னதாக 30 வது வட்டகழக செயலாளர் சுந்தரம் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். பின்னர் பொதுமக்களுக்கு அறுசுவை உணவுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் குருமூர்த்தி, மாதவரம் தெற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சந்தோஷ்குமார் மற்றும் தனசேகர், கண்ணன், சுசீலாதியாகராஜன், கஜேந்திரன், ராஜேந்திரன், ஜெயசீலன், மோகன்தாஸ், பாண்டியன், அசோக்குமார், சுந்தர்பாபு, கிருஷ்ணமூர்த்தி, தமிழ்செல்வன், கொண்டையா, ரகு, துளசிராமன், இரவணைய்யா உள்ளிட்ட திமுக அனைத்துநிலை நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

## பூந்தமல்லி ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியில் மாநிலஅளவிலான பி.எஸ். ராவ் நினைவு விளையாட்டு விழா, கொடியேற்றத்துடன் நடைபெற்றது






பூந்தமல்லி மார்ச். 6- சென்னை பூந்தமல்லியில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியில் மாநில அளவிலான டாக்டர் பி.எஸ். ராவ் நினைவு விளையாட்டு விழா, பள்ளியின் தமிழ்நாடு மாநில செயற்பாட்டு தலைவர் ஹரிபாபு தலைமையில் நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு விருந்தினராக பூந்தமல்லி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் மூத்த கபடி பயிற்ச்சியாளர் ஜெயராஜ் கலந்து கொண்டு தேசியகொடியேற்றியும், விளையாட்டு போட்டியின் கொடி மற்றும் விளையாட்டு ஜோதி ஏற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர். போட்டியில் தமிழகத்தில் உள்ள உள்ள ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியின் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கொடி அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. விளையாட்டு விழாவில் கால்பந்து, த்ரோபால், வாலிபால், கோகோ, கால்பந்து என பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. விளையாட்டு விழாவில் மண்டல போட்டி, மாநில போட்டியில் வெற்றிபெற்றவர்கள் தேசிய அளவிலான சைத்தன்யா பள்ளி மாணவர்களுடன் போட்டியிடுவார்கள் வெற்றிபெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்களும், சுழற்கோப்பைகளும் வழங்கப்பட்டது. முன்னதாக சிலம்ப வீரர்களின் வீரசாகச நிகழ்ச்சி நடைபெற்று அனைவரையும் மகிழ்வித்தனர். இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியின் முதல்வர்கள், ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர். பள்ளியின் இயக்குநர் சீமாபுப்பனா மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பள்ளியின் முதல்வர் , பி.எஸ் ராவ் நினைவு விளையாட்டு விழாவில் தமிழகத்தில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளி மாணவ, மாணவிகள் மண்டல போட்டி, மாநில போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்கள் தேசிய அளவிலான போட்டிக்கு தகுதி பெறுவர் எனவும் எங்கள் பள்ளியின் தலைவர் பி.எஸ்.ராவ் அவர்களின் கனவு கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு துறையிலும் மாணவர்களை நன்கு மேம்படுத்தபடும் என்பதே. அவருடைய கனவை அனைத்து மாணவர்களும் , நிறைவேற்றுவார்கள் எனவும் தெரிவித்தார்.

## காவேரிப்பட்டினம் பையூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா - எம்.எல்.ஏ மதியழகன் தலைமையில் நலத்திட்ட உதவிகள்



கிருஷ்ணகிரி, மார்ச் . 06- கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டினம் மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்ரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு திமுக நிர்வாகிகளுடன் இணைந்து கேக் வெட்டி விழாவை கொண்டாடினார். மேலும், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்குதல் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி மகிழ்ந்தார். இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாகமாக கலந்து கொண்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோ, திமுக நிர்வாகிகள் பரத், தமிழ்செல்வம், மதியழகன், சிவப்பிரகாசம், சிற்றரசு, உத்திர மணி, ஊர் கவுண்டர் சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சேதம் அடைந்து காணப்படும் அங்கன்வாடி மையத்தின் முகப்பு பகுதியில் உள்ள தரைத்ததளம் தடுக்கி விழும் குழந்தைகளால் பெற்றோர்கள் அச்சம்





தேவகோட்டை.மார்ச். 06- சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா கண்ணங்குடி அருகே கண்டியூர் ஊராட்சி வலையன்வயல் பகுதியில் செயல்பட்டு வருகின்ற அங்கன்வாடி மையத்தின் முகப்பு பகுதியில் உள்ள சிமெண்ட் தரைத் தளம் சேதம் அடைந்து குண்டும் குழியுமாக காணப்படுவதால் குழந்தைகள் தடுக்கி விழுந்து எழும் நிலை தொடர் கதையாக உள்ளது குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு சேதம் அடைந்த சிமெண்ட் தரைத்தளத்தை சீரமைத்து தர பல முறை அதிகாரிகளிடம் கூறியும் தற்போது வரை எந்த சீரமைப்பு பணியும் மேற்கொள்ளாததால் குழந்தைகளின் பெற்றோர்கள் குழந்தைகளை அங்கன்வாடி மையம் அனுப்புவதற்கு அச்சம் அடைந்துள்ளனர்.

இது குறித்து குழந்தைகளின் பெற்றோர்கள் கூறியவாது ,கடந்த ஆறு மாத காலமாக அங்கன்வாடி மையத்தின் முகப்பு பகுதியில் அமைந்துள்ள சிமெண்ட் தரைத்தளம் சேதம் அடைந்து இருப்பதால் அதனை சீர் செய்ய கோரி பலமுறை அதிகாரிகளிடம் கூறியும் அவற்றை சீரமைத்து கொடுக்காமல் காட்சி பொருளாக கண்டு செல்வதால் அங்கன்வாடி மையம் செல்லும் குழந்தைகள் மிகுந்த சிரமம் அடைந்து வருவது மட்டுமின்றி தடுக்கி விழுந்து எழும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இதனால் குழந்தைகளுக்கு வேறு ஏதேனும் காயங்கள் ஏற்பட்டு விடுமோ என குழந்தைகளின் பெற்றோர்கள் அச்சதில் உள்ளனர். நாள்தோறும் பலவேறு நலத்திட்டங்களை செய்து வரும் அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் அங்கன்வாடி மையத்தின் முகப்பு பகுதியில் சேதம் அடைந்து குண்டும் குழியுமாக காணப்படும் சிமெண்ட் தரைத் தளத்தை குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு சீரமைத்து தர குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## 'க்ளோஸ்...' வைரல் ரியாக்ஷனுக்கு முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

தஞ்சாவூர், மார்ச்.6- "கூட்டணி ஒப்பந்தம் அனைவரும் பாராட்டும் வகையில், காங்கிரஸ் கட்சியுடன் பேசி முடிக்கப்பட்டது" என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

மேலும், தேர்தல் கூட்டணி இறுதி செய்யப்பட்டதை உணர்த்தும் வகையில், 'க்ளோஸ்' என்று சொல்லும் விதமாக தான் சைகை செய்த வீடியோ காட்சிகள் வைரல் ஆனது குறித்தும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

தஞ்சாவூரில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சகோதரி இல்ல திருமண விழாவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியது: "அன்பில் தர்மலிங்கத்துக்கும், தலைவர் கருணாநிதிக்கும் நல்ல நட்பு இருந்தது.

அதேபோல் எனக்கும், பொய்யாமொழி நல்ல பக்கபலமாக இருந்தார். தற்போது உதயநிதிக்கும் மகேஸுக்கும் நல்ல நட்பு உள்ளது. இந்த நட்பு என்பது வாழையடி வாழையாக தொடர்கிறது.

அமைச்சர் அன்பில் மகேஸ் தற்போது பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக உள்ளார். ஓர் அமைச்சர் எப்படி பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக பணியாற்றி வருகிறார்.

சட்டமன்றத்திலும், பிற விழாக்களிலும் புள்ளிவிரங்களோடு, கணினியை போன்று பேசக்கூடிய ஆற்றலை பெற்றவர். அவரைப் பார்த்து எல்லோரும் பாராட்டும்போது, அவரது தந்தை பொய்யாமொழி இருந்தால் எப்படி சந்தோஷம் அடைவாரோ அதே போல் நான் சந்தோஷமடைகிறேன்.

காங்கிரஸ் கட்சியுடன் நேற்று இரவு வெற்றிகரமாக பேசி ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. அதுவும் வெற்றிகரமாக அனைவரும் பாராட்டும் வகையில் முடித்துவிட்டு இந்தத் திருமணத்துக்கு வந்துள்ளேன்.

இந்த ஒப்பந்தத்தை முடித்து விட்டு காரில் ஏறும்போது, கையில் சைகையால் சொல்லிய காட்சி சமூக வலைதளங்களில் பார்த்திருப்பீர்கள். அது திட்டமிட்டு செய்ததில்லை. அங்கு எதிரே இருந்த பத்திரிகை நண்பர்கள் பார்த்து 'முடிந்துவிட்டதா' எனக் கேட்டனர். அதற்கு 'முடிந்துவிட்டது' எனக் கூறினேன் அவ்வளவுதான். அது தற்போது சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

மாநிலங்களவை வேட்பாளர்களாக 2 பேரை திமுகவில் அறிவித்துள்ளோம். கூட்டணி கட்சிக்கு 2 இடங்களைக் கொடுத்துள்ளோம்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் விலங்குகள் கருத்தடை மையத்தினையும் மற்றும் லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி பகுதியில் துணை சுகாதார நிலையத்தினையும் திறந்து வைத்தார்கள்

### மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி புதிய கட்டடங்களை பார்வையிட்டார்



பெரம்பலூர், மார்ச். 6- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத் திலிருந்து, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.63 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை மையக் கட்டடத்தினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி பகுதியில் ரூ.45 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையம் கட்டடத்தினையும் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வினை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி லெப்பைக்குடிக்காடு பேரூராட்சிக்குட்பட்ட ஜமாலியா நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள துணை சுகாதார நிலையத் திலிருந்து நேரலையில் பார்வையிட்டு குத்து விளக்கேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். மேலும், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.63 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை மையக் கட்டிடத்தினை பார்வையிட்டு குத்துவிளக்கேற்றினார்.

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி ஜமாலியா நகரில் 15 வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் இந்த துணை சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் லெப்பைக்குடிக்காடு நிலையத்திற்கு உட்பட்ட 10,744 கிராம மக்கள் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களுக்கு தரமான முதன்மை சுகாதார சேவைகள், கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் நல சேவைகள், தடுப்பூசி சேவைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் மேலும் மேம்படுத்தப்பட்ட வசதிகள் வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோல பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட ஆத்தூர் சாலையில், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.63 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள விலங்குகள் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, தெருநாய்களுக்கான கருத்தடைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இம்மையத்தில், விலங்குகள் அறுவை சிகிச்சை அரங்கம், கிருமி நாசினி அறை, மருந்துவர் அறை, மருந்துகள் வைப்பறை, உதவியாளர் அறை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்பு விலங்குகளை தங்க வைத்தல் வசதி போன்ற உட்கட்டமைப்புகளுடன் இந்த மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் தெரு நாய்களின் எண்ணிக்கையை முறையாகக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைக் குறைக்கவும் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் "நாய்கள் கருத்தடை (கிஙிசி கிஸ் வீனீணீ றிவீசஷீமீ சிஷீஸீமீஷீஷீ) மற்றும் தடுப்பூசித் திட்டம்" தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

தெரு நாய்களின் எண்ணிக்கையை மனிதாபிமான முறையில் கட்டுப்படுத்துதல், வெறிநாய் நோய் (ஸிணீதீவீமீs) பரவாமல் தடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், நாய்களுக்கு இடையே ஏற்படும் சண்டைகள் மற்றும் ஆக்ரோஷமான குணத்தைக் குறைத்தல் போன்றவையே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதனடிப்படையில், தெரு நாய்களுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில், தெருவில் சுற்றித் திரியும் ஆண் மற்றும் பெண் நாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை இலவசமாக செய்யப்படும். அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களின் காதுகளில் சிறிய 'கூழ்' வடிவ அடையாளம் இடப்பட்டிருக்கும். இத்தகைய நாய்களை மீண்டும் கருத்தடை செய்யத் தேவையில்லை.

பெரம்பலூர் நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காது அடையாளம் இல்லாத நாய்கள் இருந்தால், கால்நடை பராமரிப்புத்துறையால் செயல்படுத்தப்படும் சமூக நாய்களுக்கான இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையத்திற்கு நாய்களை கொண்டு செல்லலாம். நாய்களுக்கு உணவளிப்பவர்கள், அறுவை சிகிச்சை முடிந்து திரும்பும் நாய்களுக்குச் சில நாட்கள் கூடுதல் கவனம் செலுத்துவது அவற்றின் விரைவான குணமடைதலுக்கு உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், அட்மா தலைவர் ஜெகதீசன், நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் மரு. பேபி நிர்மல், மாவட்ட சுகாதார அலுவலர் (பொ) மரு. சுப்பிரமணி, லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி ருக்மணி, நகர்மன்ற துணைத்தலைவர் ஆதவன், லெப்பைக்குடிக்காடு பேரூராட்சி மன்ற துணை தலைவர் ரசூல் அஹமது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






# ஹோலி சைல்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா

மாதவரம், மார்ச். 6-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றத்தில் இயங்கிவரும் ஹோலி சைல்டு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தொடக்கப்பள்ளி மாணவர்களின் ஆண்டு விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் மாலா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. பின்னர் மாணவமாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக பேச்சாளர் பர்வீன் சுல்தானா கலந்துகொண்டு குழந்தைகள் வளர்க்கும் விதம் குறித்து சிறப்புரையாற்றினார்.

பின்னர் பள்ளியின் தாளாளர் ஷீனாஜோசப் கலந்துகொண்டு விளையாட்டு போட்டி மற்றும் கலைநிகழ்ச்சிகள், அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவுப் பரிசுகளை வழங்கினார்.இதில் பள்ளி பெற்றோர்கள், மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# மக்களாட்சியை வலுப்படுத்த வாக்காளரியல் தனிக் கல்வித் துறையாக வேண்டும் - தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் டாக்டர் வீ. ராமராஜ் சிறப்புரை

கிருஷ்ணகிரி, மார்ச். 06-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் "எதற்காக வாக்காளரியல் கல்வி தனித் துறையாக கற்பிக்கப்பட வேண்டும்?" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் டி. லாவண்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் டாக்டர் வீ. ராமராஜ் சிறப்பு உரையாற்றினார்.





கருத்தரங்கில் பேசிய டாக்டர் வீ. ராமராஜ், 1996 ஆம் ஆண்டில் "வாக்காளரியல்" (Voterology) மற்றும் "வாக்காளரிலிசம்" (Voterologism) என்ற கருத்துகளை உருவாக்கி அதன் கொள்கைகளை வடிவமைத்ததாக தெரிவித்தார். வாக்குகள், வாக்காளர்கள் மற்றும் தேர்தல்கள் குறித்து அறிவியல் அடிப்படையில் வழங்கப்படும் கல்வியே வாக்காளரியல் என்றும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும் நல்லாட்சியை உருவாக்குவதற்கும் வாக்காளரியல் கோட்பாடுகளை பொதுமக்களிடையே பரப்புவதே வாக்காளரிலிசம் என்றும் அவர் விளக்கினார்.

உலக நாடுகளில் மன்னராட்சி முறைகள் குறைந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் உருவானபோது அரசியல் அறிவியல் தனிக் கல்வித் துறையாக உருவானது. அதுபோல், வாக்கு, வாக்காளர் மற்றும் தேர்தல் தொடர்பான கல்வி பல ஆண்டுகளாக அரசியல் அறிவியலின் உட்பிரிவாக இருந்து வந்தாலும், இன்றைய உலகளாவிய மக்களாட்சியில் வாக்களிக்கும் உரிமை மிக முக்கியமானதாக இருப்பதால் "வாக்காளரியல்" தனிக் கல்வித் துறையாக உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பள்ளிகளில் ஒரு பாடமாகவும், கல்லூரிகளில் இளங்கலை மாணவர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு தேர்வுத் தாளாகவும் வாக்காளரியல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும் பல்கலைக்கழகங்களில் வாக்காளரியல் முதுகலை (எம்.ஏ.) பட்டப்படிப்பும் தொடங்கப்பட வேண்டும் என்றார். வாக்காளரியலின் அடிப்படைகள், தேர்தல் வரலாறு, தேர்தல் நிர்வாகம், தேர்தல் சட்டம் மற்றும் நீதி, வாக்காளர் உளவியல் மற்றும் சமூகவியல், தேர்தல் கணிப்பியல் (Psephology), வாக்காளரியல் ஆராய்ச்சி முறைகள் உள்ளிட்ட பாடங்கள் இதில் இடம்பெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வாக்காளரியலின் கொள்கைகள் குறித்து அவர் விளக்கும்போது, "வாக்கு என்பது ஜனநாயக அரசாங்கத்தின் தன்மையையும் உலகின் அரசியல் போக்குகளையும் தீர்மானிக்கும் மிகப்பெரிய சக்தியாகும். எந்த விலை கொடுத்தும் ஆட்சியை கைப்பற்ற முயற்சிப்பவர்களை வாக்காளர்கள் நிராகரிக்க வேண்டும். வாக்காளர் அறியாமையும் ஊழலும் தேர்தல் செயல்முறையிலிருந்து நீக்கப்பட வேண்டும்" என்றார்.

மேலும் சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை ஆகியவற்றுக்கு இணையாக தேர்தல் நிர்வாக அமைப்புகளுக்கும் அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கப்பட்டு அவை அரசாங்கத்தின் நான்காவது கிளையாக செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தேர்தல் ஆணையம், அரசியல் கட்சிகளை ஒழுங்குபடுத்தும் அமைப்பு, வாக்காளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரமளிப்பு ஆணையம், தேர்தல் வழக்குகளை ஆறு மாதங்களில் தீர்க்கும் சிறப்பு தீர்ப்பாயங்கள் ஆகியவை தேர்தல் நிர்வாக அமைப்புகளின் பகுதிகளாக அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தகவலறிந்த வாக்காளர்களை உருவாக்கவும் தேசிய தேர்தல் மேலாண்மை அமைப்புகளை மேம்படுத்தவும் சர்வதேச சட்டங்களையும் நிறுவனங்களையும் உருவாக்க ஐக்கிய நாடுகள் சபை முன்வர வேண்டும் என்றும் அவர் கூறினார். உண்மையான ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் உலக அமைதிக்கும் வாக்காளரியல் சிறந்த வழியாக அமையும் என்பதால் கல்வி, ஆராய்ச்சி மற்றும் நடைமுறையை இணைக்கும் தனிக் கல்வித் துறையாக வாக்காளரியலை உலகளாவிய அளவில் உருவாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# மாவட்ட ஆட்சியர் கலந்து கொண்ட வாக்காளர் விழிப்புணர்வு பேரணி

திண்டுக்கல் மார்ச். 6-

திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, பொதுமக்கள் மற்றும் புதிய வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 850க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு நடத்தப்பட்ட "என் நாடு என் வாக்கு" விழிப்புணர்பு பேரணி நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், கலந்து கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையம் முன்னேற்பாடு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன்படி, திண்டுக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் புதிய வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

இப்பேரணியில், திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி, அரசு செவிலியர் கல்லூரி, ஜி.டி.என். கல்லூரி, பார்வதீஸ் கல்லூரி மற்றும் புனித அந்தோனியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளைச் சேர்ந்த 850க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். மேலும், இப்பேரணியில் கலந்து கொண்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் "100% தவறாமல் வாக்களிப்போம்" "எனது வாக்கு எனது உரிமை" "என் வாக்கு என் இந்தியா" "உங்கள் வாக்கு உங்கள் எதிர்காலம்" ஆகிய முழக்கங்களை தொடர்ந்து எழுப்பப்பட்டும், தேர்தல் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியவாறும் பொதுமக்கள் மற்றும் வாக்காளர்களுக்கு தேர்தலில் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தெரிவித்துள்ளார்

தொடர்ந்து, இப்பேரணியானது திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கி, தலைமை தபால் நிலையம் பேருந்து நிலையம் ஸ்ரீ அரசு மருத்துவமனை வழியாக சென்று மீண்டும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது.

இப்பேரணியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஜெயபாரதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, தேர்தல் வட்டாட்சியர் (தனி) முத்துராமன் அவர்கள் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

# பூண்டி அருகே கச்சூரில் மாலை தந்தி செய்தியின் எதிரொலியாக குடிதண்ணீரில் கலந்த கழிவுநீர் அகற்றம்

திருவள்ளூர், மார்ச்.6-

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஒன்றியம் கச்சூர் பகுதியில் குடிநீர் குழாயில் கழிவுநீர் கலந்து வருவது சம்பந்தமாக மாலைத்தந்தி தினசரி நாளிதழில்0 5.03.2026 அன்று காலை செய்தி வெளியிட்ட நிலையில் இந்த செய்தியின் எதிரொலியாக பூண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் வரப்பிரசாத் அவர்கள் செய்தியாளரை



தொலைபேசியில் தொடர்பு கொண்டு சம்பவ இடமான கச்சூர் கிராமத்திற்கு வரவழைத்து வட்டார வளர்ச்சி அலுவலர் தலைமையில் தூய்மைப் பணியாளர் ஊராட்சி ஊழியர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து கழிவு நீரை அகற்றி சுத்தமான குடிநீர் கிடைக்க பணிகளை மேற்கொண்டார் இப்பணிகளை மேற்கொண்ட நிஞிளி அவர்களுக்கு அந்பகுதி மக்கள் தங்கள் நன்றிகளை தெரிவித்தனர்

# நபார்டு நிதியில் ரூ.66 லட்சம் மதிப்பில் தார்சாலை பணிக்கு பூமி பூஜை - எம்.எல்.ஏ. அசோக்குமார் துவக்கி வைப்பு

கிருஷ்ணகிரி, மார்ச். 6-

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேப்பனஹள்ளி ஒன்றியம் எண்ணேகொள் புதூர் கிராமத்தில் இருந்து பூதிப்பட்டி வரை நபார்டு திட்டம் 2025ஸ்ரீ26 ஆம் ஆண்டு நிதியில் ரூ.66 லட்சம் மதிப்பில் தார்சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது.



இந்தப் பணிகளை அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சைலேஷ் கிருஷ்ணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முருகன், முன்னாள் கவுன்சிலர் சின்னதம்பி, ஒன்றிய பொருளாளர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் கட்சியினர் பெருமாள், ஆனந்தன், ராமர், ராஜ் குமார், பிரகாஷ், சங்கர், ராஜி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். ஒப்பந்ததாரர் சின்னதுரை, செந்தில்குமார், முனிரத்தனம், தியாகராஜன், செல்வம் ஆகியோரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.இந்த சாலைப் பணி நிறைவு பெற்ற பிறகு அந்தப் பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதி மேம்படும் என தெரிவிக்கப்பட்டது.

# இளநிலை உதவியாளர்,தட்டச்சர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி, மார்ச். 6-

கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் காலியாக உள்ள பாதுகாப்பு அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.



இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005ன் கீழ் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கு பெண் விண்ணப்பதாரர்களிடமிருநது தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அதன்படி, பாதுகாப்பு அலுவலர் பணியிடத்திற்கு, முதநிலை சமூகவியல், முதுநிலை உளவியல், முதுநிலை சமூப்பணிகள் மற்றும் கணினி அறிவு இருத்தல் வேண்டும். வயது வரம்பு 22 முதல் 35 வயது வரை இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.35 ஆயிரம் வழங்கப்படும்.

இளநிலை உதவியாளர், தட்டச்சர் பணியிடத்திற்கு, 10ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் தட்டச்சு கணினி பயன்பாடு அறிவு இருத்தல் வேண்டும். வயய வரம்பு 22 முதல் 35 வயது வரை இருத்தல் வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் ரூ.12 ஆயிரம் வழங்கப்படும்.

விரும்பமும், தகுதியும் உள்ள விண்ணப்பதாரர்கள் உரிய சான்றிதழ்களுடன் வருகிற 9ம் தேதி மாலை 5 மணிக்குள், அறை எண்.21, மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட கலெக்டர் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரியில் நேரடியாக விண்ணப்பம் செய்திட வேண்டும். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# தாராபுரம் அரசு மருத்துவமனையில் ரூ.24 கோடியில் புதிய கூடுதல் கட்டிடம் திறப்பு 100 படுக்கைகள், ஆறு தளங்கள், நவீன சிகிச்சை வசதிகள் - அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு

திருப்பூர், மார்ச்.6-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மருத்துவமனையில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கூடுதல் மருத்துவமனை கட்டடத்தை மு.க. ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி நேரில் கலந்து கொண்டார்.






பொதுப்பணித்துறை சார்பில் தேசிய சுகாதார திட்டத்தின் கீழ் 62,228 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் ஆறு தளங்களுடன் 100 படுக்கை வசதியுடன் இந்த நவீன கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. புதிய கட்டிடம் திறக்கப்பட்டதன் மூலம் தாராபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு மேம்பட்ட மருத்துவ சேவைகள் கிடைக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தரைத்தளத்தில் 9,312 சதுர அடியில் வரவேற்பறை, கதிரியக்க பிரிவு, சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அறைகள், இரண்டு ஆய்வகங்கள், அல்ட்ரா கதிர்வீச்சு அறை, வெளிப்புற நோயாளிகளுக்கான இருதய சிகிச்சை பிரிவு, மருந்தக இருப்பு அறைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் டயாலிசிஸ் வார்டு, தீவிர சிகிச்சைப் பிரிவு, பணி மருத்துவர்கள் மற்றும் செவிலியர் அறைகள், பதிவறை, மருந்து இருப்பு அறை, கழிவறை மற்றும் சாய்தள வசதிகள் உள்ளன.

இரண்டாம் தளத்தில் இரண்டு அறுவை சிகிச்சை அறைகள், நோயாளிகளை அறுவை சிகிச்சைக்குத் தயார்படுத்தும் அறை, பணி மருத்துவர்கள் மற்றும் செவிலியர் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் தளத்தில் பெண்களுக்கான மருத்துவ சிகிச்சை பிரிவு, எலும்பு அறுவை சிகிச்சை பிரிவு, ஆண்களுக்கான அறுவை சிகிச்சை வார்டு, மருத்துவ சிகிச்சை பிரிவு ஆகியவை இடம்பெற்றுள்ளன.

நான்காம் தளத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மருத்துவ மற்றும் எலும்பு அறுவை சிகிச்சை பிரிவுகள் தனித்தனியாக செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஐந்தாம் தளத்தில் குழந்தைகள் பிரிவு, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான காப்பீடு திட்ட பிரிவு, பணி மருத்துவர் மற்றும் செவிலியர் அறைகள் உள்ளன.

ஆறாம் தளத்தில் கண் சிகிச்சை பிரிவு, இரத்த வங்கி, கூட்ட அரங்கம் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த புதிய கட்டிடம் மூலம் தாராபுரம் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறியுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர், மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர், திருப்பூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், பொதுப்பணித்துறை பொறியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161